**செய்தி வெளியீடு எண்: 454** **நாள்: 23.03.2022**

## <u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (23.03.2022) தலைமைச் செயலகத்தில், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில், இளநிலை உதவியாளர் பதவிக்கான பணிநியமன ஆணைகள் மற்றும் புதிய சுமையூர்தியின் சாவியினை ஊர்தி ஓட்டுநரிடம் வழங்கினார்.**

இன்று (23.03.2022) தலைமைச் செயலகத்தில், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் பணிபுரிந்து பணிக்காலத்திலேயே இயற்கை எய்திய இரண்டு அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவிக்கான பணிநியமன ஆணைகள் மற்றும் 2021-2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, அரசாணை (நிலை) எண்.135, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(எஅ2-1)த்துறை, நாள்.26.10.2021ன்படி, ரூ.18,00,000/- மதிப்பில் அரசு மைய அச்சக பயன்பாட்டிற்கு வாங்கப்பட்டுள்ள புதிய சுமையூர்தியின் சாவியினை ஊர்தி ஓட்டுநரிடம் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர், திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையர் திருமதி ஆ.சுகந்தி, இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in